தொழு எருவும் இல்லாமல் பசுந்தாள் உரங்களை பயன்படுத்தி நெல் சாகுபடி



இவற்றுக்கு மாற்றாக, நெல் வயலில் இருமுறை பசுந்தாள் உரங்களை வளர்த்து மடக்குகிறார். நெல் நடவுக்கு முன்பு பசுந்தாள் உரச் செடிகளை வளர்த்து, பூ பூக்கும் பருவத்தில் சேற்றில் மடக்கி உழுது விடுகிறார். நெல் அறுவடைக்கு முன்பு தழை உரச் செடிகளை விதைக்கிறார். நெல் அறுவடை முடிந்த பிறகு, தழை உரச்செடிகளின் விதை முற்றும் போது விதைகளை அறுவடை செய்து கொண்டு, மேலும் வளர விடுகிறார். தக்கைப்பூண்டு செடி 14 உயரம் வளர்கிறது. பிறகு மடக்கி உழப்படுகிறது.14 முதல் 18 நாள் வயதுடைய நாற்றை நடுகிறார். ஏக்கருக்கு 25 குவிண்டால் விளைச்சல் எடுக்கிறார்.

“மண்வளம் காத்து உற்பத்தியைக் கூட்ட நீர் நிர்வாகமும் உயிர் வழி நைட்ரஜன் இருப்பும் முக்கியம்” என்று கருதும் நந்தீஷ் கர்நாடகத்தைச் சேர்ந்தவர்.

முகவரி
பி.என். நந்தீஷ்,
சிக்கரபுரா தாலுக்,
சிமோகா மாவட்டம்,
சர்ச்ச் கண்டி - 577214
கர்நாடகா மாநிலம்